முன்வருமா என்ற கேள்வியைக் கேட்டேன். அதற்குரிய விடையில், அமைச்சர் அவர்கள் படித்ததிலே காவாளை விடுபட்டிருக்கிறது. அதையும் சேர்த்து இரண்டுக்கும் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் தனியாக அதைப்பற்றி எழுதித் தருவாரேயானால் பரிசீலிக்கலாம்.

வழுக்குப்பாறை திட்டம்.

*929.—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) அந்தியூர் தொகுதியில் வழுக்குப்பாறை திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா :

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இந்தத் திட்டத்தை அரசு பரிசீலனை செய்தது. பல்வேறு சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து பார்த்த பிறகு சாத்தியம் இல்லை என்று கைவிடப்பட்டது.

திரு. வே. பெரியசாமி : துணைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதியில் வழுக்குப்பாறை மணியாச்சி திட்டம் என்று நீண்ட காலத்திற்கு முன்னாலே, காங்கிரஸ்காரர் காலத்திலேயிருந்து இந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று அரசிடம் கோரிக்கை வைத்தார்கள். இந்தத் திட்டத்தின் வாயிலாக, சங்கராபாளையம், வெள்ளித்திருப்பூர், மாத்தூர், எண்ணமங்கலம், கண்ணப்பள்ளி, இலுப்பள்ளி, அம்மாபேட்டை, நெருஞ்சிப்பேட்டை போன்ற பகுதிகளில் மழைக் காலங்களில் அங்கே மழையே இல்லாத நிலையில் மிகவும் வறட்சி ஏற்பட்டு, ஏறத்தாழ 10 ஆண்டுகளாக மக்கள் அல்லல்பட்டுக் கொண்டு, குடிதண்ணீருக்குக்கூட வழி இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறவர்கள் பயனடைவார்கள். எல்லாப்பகுதிகளிலேயும் இதேபோன்ற திட்டத்தினைச் செய்திருக்கிறார்கள். ஆனால் பெரியார் மாவட்டத்திலே அந்தியூர் தொகுதியில் மட்டும் இத்திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதினால் 3,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே தயவு செய்து அமைச்சர் அவர்கள் இதனை மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1991 சனவரி 22]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு சுமார் 269 ஏக்கர் வன நிலங்கள் தேவைப்படுகின்றன. இந்தத் திட்டத்தை எங்கே அமைக்க விரும்புகிறோமோ அந்த இடத்திலேதான் அதிகமான சந்தன மரங்கள் வளர்ந்து நிற்கின்றன என்று கருதுகிறேன். வன விலங்குகளும் இருக்கிற காரணத்தால் மத்திய அரசு இந்த இடத்தில் ஒரு நீர்த் தேக்கத்தைக் கட்டக் கூடாது என்று மறுப்பு அளித்திருக்கிறது. Collector, Commissioner for land Administration and principal chief conservator of Forests ஆகிய அத்தனை பேரும் இந்தத் திட்டத்திற்கு அனுமதி மறுத்து இருக்கிறார்கள். இரண்டாவது இதனுடைய பயன் துய்க்கிற வீதத்திலே இது குறைந்து காணப்படுவதாலும் இத்திட்டத்தை இப்போது அமைப்பதற்குச் சாத்தியக்கூறு இல்லை என்று அரசு முடிவு எடுத்து இருக்கிறது.

திரு. வே. பெரியசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இத்திட்டத்தினைப் பற்றி விளக்கிச் சொன்னார்கள். மத்திய, மாநில அரசினுடைய வன இலாக்கா அதிகாரிகள் சந்தன மரங்கள் அங்கே அதிகமாக இருக்கின்றன என்றும், அவைகள் எல்லாம் பாதிக்கப்படும் என்றும், வன விலங்குகள் பாதிக்கப்படும் என்றும், ஏராளமான நிலங்கள் பயிர் பாசனம் செய்ய முடியாத நிலை ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டியிருப்பதாக எனக்குத் தகவல் வந்தது என்று அமைச்சர் குறிப்பிட்டார். அங்கே இருக்கின்ற சந்தன மரங்களை எல்லாம் ஏற்கெனவே வீரப்பன் குரூப் வெட்டிச் சென்றுவிட்டார்கள். எந்தவிதமான மரமும் கிடையாது. சத்தியமாக கிடையாது அந்தப் பகுதியிலே. (சிரிப்பு) அந்தப் பகுதியிலே வன விலங்குகள் மிகவும் குறைவு. எனவே வீரப்பன் என்றால் இங்கே இருக்கின்ற நம்முடைய (சிரிப்பு) காணாமல் போன, காவல் துறையினால் பிடிக்கமுடியாமல் போன அவல நிலை ஏற்பட்டிருக்கிற அந்த வீரப்பனைப் பற்றிச் சொல்கிறேன். நீண்ட நெடுங்காலமாக பல கோடி ரூபாய் செலவு செய்தும் கூட, நம்முடைய காவல் துறையினால் பிடிக்க முடியாத வீரப்பன் குரூப் ஏறத்தாழ ஒரு ஆண்டு காலமாக மரங்களை அடியோடு வெட்டிக் கொண்டு சென்று விட்டார்கள். வேரோடு தோண்டி எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள். எனவே தயவுசெய்து அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. வன விலங்குகளும் மிகவும் குறைவு. இதனால் அங்கே சேதாரம் ஆகக்கூடிய நிலப்பரப்பும் குறைவு. அந்த மணியாச்சி தண்ணீர் காவேரிக்கு வந்து அங்கே வீணாகப் போய்க் கொண்டிருக்கிறது (மணியடிக்கப்பெற்றது) தயவுசெய்து மறுபரிசீலனை செய்து இந்தத் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவு செய்ய வேண்டும் என்று நான் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

10-15 மணி

(பதில் இல்லை)

திரு. தூ. க. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தியூருக்கு அருகிலே வழுக்குப் பாறைத்திட்டம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு அருகிலே தூக்கநாயக்கன் பாளையம் ஒன்றியத்தில் வேதபாறை நீர்த் தேக்கத் திட்டம் என்ற ஒரு திட்டம் ஆய்வில் இருந்தது. அங்கே ஆழ்துளைக் கிணறுகள் போட்டு அதை ஆய்வு செய்து கொண்டிருந்தார்கள். அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன். அதோடு அந்தப் பகுதியில் சந்தன மரங்கள் எல்லாம் இப்போது வெட்டப்படவில்லை. கடந்த காலத்தில் வெட்டப்பட்டது. அதற்குப் பிறகு தமிழக அரசிடம் நான் அந்தப் பகுதியான சத்தியமங்கலத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் நேரில் வந்து பார்த்துச் சொன்னேன். அங்கே உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, இப்போது அங்கே யாரும் இல்லை என்பதை நான் திட்டவட்டமாகக் கூறிக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிட்ட திட்டத்தைப் பற்றி ஒரு தனிக் கேள்வி போட்டால் விவரங்களை நான் அளிக்கத் தயாராக இருக்கிறேன்.

செய்யார் அணைக்கட்டு பாலத்தை மாற்றி அமைத்தல்

* 10644.—திரு. மு. சின்னக்குழந்தை :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம், வந்தவாசி வட்டம், ஆவணியாபுரம் அருகே உள்ள செய்யார் அணைக்கட்டு பாலத்தை மாற்றி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றி அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : செய்யார் அணைக்கட்டு பாலத்தை மாற்றி அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. மு. சின்னக்குழந்தை : மாண்புமிகு பேரவைத் துண்ணைத் தலைவர் அவர்களே, ஆரணியிலிருந்து வந்தவாசிக்கும், திண்டிவனத்திற்கும் அதிகமான நெரிசலான போக்குவரத்து உள்ள